செய்தி வெளியீடு எண்: 208/2016 நாள்: 10.04.2017

**வேலூர் மத்திய சிறையின் கட்டுப்பாட்டு கிளைச்சிறைகளில் பணிபுரிய ஓர் அரிய வாய்ப்பு!**

**தகுதியுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன!!**

வேலூர் மத்திய சிறையின் கட்டுபாட்டில் உள்ள வேலூர், ஆம்பூர், ஆரணி, செய்யார், செங்கம், வந்தவாசி ஆகிய பகுதிகளில் இயங்கி வரும் கிளைச்சிறைகளில் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட சமையலர் பணியிடத்திற்கு (Cook) ஆண், பெண் ஆகிய இருபாலரிடமிருந்தும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இப்பணியிடங்களுக்கான கல்வித் தகுதி 8 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இத்துடன் விண்ணப்பதாரர்கள் இரண்டு வருடங்களுக்கு குறையாமல் சமையல் பணியில் முன் அனுபவம் வாய்ந்தவர்களாகவும் நன்கு சமைக்க தெரிந்தவர்களாகவும் இருத்தல் வேண்டும். இந்த காலிப்பணியிடங்களுக்கான வயது வறம்பில் பிற்படுத்தப்பட்டேடர், மினவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகிய வகுப்பினருக்கு 30 வயதும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பினை தேர்ந்தவர்களுக்கு 35 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும். இந்த வாய்ப்பினை பயன்படுத்தி அரசுப்பணியில் சேர விரும்பும் விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பங்களை உரிய கல்வி சான்று, அனுபவ சான்று, ஜாதி சான்று மற்றும் இதர சான்றிதழ்களை “சிறைக்கண்காணிப்பாளர், மத்திய சிறை, வேலூர் - பின் 632 002” என்ற முகவரிக்கு வருகின்ற 28.04.2017-க்குள் கிடைக்குமாறு அனுப்பி வைக்க வேண்டும் என வேலூர் மத்திய சிறைக்கண்காணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
வேலூர்-9.

10.4.17